# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## சமாதானம், கல்வி, வலுவளிப்பு மற்றும் அபிவிருத்திக்கான விளையாட்டு நிறுவகம் (SPEED) *(கூட்டிணைத்தல்)*

**சமாதானம், கல்வி, வலுவளிப்பு மற்றும் அபிவிருத்திக்கான விளையாட்டு நிறுவகத்தை (SPEED) கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

---

*கம்பஹா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (வண.) அதுரலியே ரதன தேரர் அவர்களால் 2015, மாச்சு மாதம் 17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது.*

*(2015, மாச்சு மாதம் 09 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ *337 ஆம் சட்டமூலம்* ]


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா *11.00*** **தபாற் செலவு : *10.00***

2-PL 008851 -225 (2015/03)

# சமாதானம், கல்வி, வலுவளிப்பு மற்றும் அபிவிருத்திக்கான விளையாட்டு நிறுவகம் (SPEED) *(கூட்டிணைத்தல்)*

## சமாதானம், கல்வி, வலுவளிப்பு மற்றும் அபிவிருத்திக்கான விளையாட்டு நிறுவகத்தை (SPEED) கூட்டிணைப்பதற்கான தொரு சட்டம்

*முன்னுரை.*

''சமாதானம், கல்வி, வலுவளிப்பு மற்றும் அபிவிருத்திக்கான விளையாட்டு நிறுவகம் (SPEED)'' என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான நிறுவகமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க சொல்லப்பட்ட நிறுவகத்தோடு தொடர்புபட்ட அதன் குறிக்கோள்களைப் பயனுற நிறைவேற்றி எல்லாக் கருமங்களையும் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்கென இலங்கையில் இதன்முன்னர் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட நிறுவனமானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம், 2015 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, சமாதானம், கல்வி, வலுவளிப்பு மற்றும் அபிவிருத்திக்கான விளையாட்டு நிறுவகம் (SPEED) (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*சமாதானம், கல்வி, வலுவளிப்பு மற்றும் அபிவிருத்திக் கான விளையாட்டு நிறுவகத்தைக் கூட்டிணைத்தல்.*

**2.** (1) இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன்பின்னரும் (இதனகத்துப்பின்னர் ''நிறுவகம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும் சமாதானம், கல்வி, வலுவளிப்பு மற்றும் அபிவிருத்திக்கான விளையாட்டு நிறுவகத்தின் (SPEED) தற்போதைய உறுப்பினர்களாகவுள்ள அல்லது இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படும் அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப் பின்னர் ''கூட்டுத்தாபனம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்)

2-PL 008789 - 325 (2015/02)

''சமாதானம், கல்வி, வலுவளிப்பு மற்றும் அபிவிருத்திக்கான விளையாட்டு நிறுவகம் (SPEED)'' என்னும் பெயர்மகுடத்தின்கீழ் இடையறாவழியுரிமைகொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாகவிருத்தல் வேண்டும் ; அத்துடன் அப்பெயர்கொண்டு அது வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் அதன் விருப்பப்படி அதனை மாற்றவும் அது முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்புகள் (பதிவுசெய்தலும் மேற்பார்வை செய்தலும்) சட்டத்தின் கருத்தெல்லைக்குள்ளும் அதன் நோக்கத்துக்காகவும் ஒரு வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்பாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள், கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்வதற்கும் அது தொடர்பாகவும் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

3. (1) கூட்டுத்தாபனம் அமைத்துருவாக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) ஒலிம்பிக் விளையாட்டுசார் நெறிகளையும் விழுமியங்களையும் போற்றிக் காப்பதற்கான மேடையொன்றைத் தாபிப்பதன்மூலம் சர்வதேச விளையாட்டு நிகழ்ச்சிகளில் இலங்கை மற்றும் தெற்காசிய நாட்டவர்களின் செயல்நிறைவேற்றத்தை அதிகரித்தலும் ஒலிம்பிக் இயக்கத்துக்கு ஆதரவளித்தலும் ;

(ஆ) தேசிய மற்றும் பிராந்திய சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கும் மோதலைத் தடுப்பதற்கும் பங்களிப்பதற்காக விளையாட்டின் இயல்திறனை அதிஉச்ச அளவினதாக்குதலும் அபிவிருத்திக்காகவும் சமாதானத்துக்காகவும் விளையாட்டு என்பதன்கீழ் சமாதானம், கல்வி மற்றும் சமூக ஒருங்கிணைப்புக்கான கருவியாக விளையாட்டைப் பயன்படுத்துவதன்மூலம் சர்வதேச ரீதியில் உடன்பட்டுக்கொள்ளப்பட்ட அபிவிருத்தி இலக்குகளை எய்துதலும் ;

(இ) மூலவளங்கள், சேவைகள் மற்றும் வசதிகளுக்கான அணுக்கத்தை உருவாக்குவதனூடாக இலங்கையில் உயர்தொழில்சார், பாரம்பரிய மற்றும் பொழுது போக்கு விளையாட்டை மேம்படுத்துதல் ;

(ஈ) சர்வதேச விளையாட்டு நிகழ்ச்சிகளில் குறிப்பாகப் பெண்களின் படிப்படியான உயர்செயல் நிறைவேற்றத்தை அவர்களது வாழ்க்கைத் தொழிலுக்கும் விளையாட்டிலான முன்னேற்றத்துக்கும் ஆதரவளிப்பதுனூடாகப் பால் சமத்துவத்தையும் அவர்களுக்கான வலுவளிப்பையும் மேம்படுத்துதல் ;

(உ) உடற் கல்வியினூடாக உடல்நலத்தை மேம்படுத்துவதற்கும் போதைப்பொருள் துஷ்பிரயோகத்தைத் தடுப்பதற்குமான வழிவகையாக விளையாட்டின் பயன்பாட்டை முன்னேற்றுதலும், அங்கவீனங்களுக்குட்பட்ட ஆட்களைச் சேர்த்தலையும் அவர்களின் நல்வாழ்வையும் முன்னெடுத்தலும் ஓரங்கட்டப்பட்ட குழுவினர் சமுதாயத்தில் இணைக்கப்படுவதனை வசதிப்படுத்துதலும் ;

(ஊ) ஓரங்கட்டப்பட்ட தெற்காசிய விளையாட்டில் ஈடுபடும் ஆண்களும் பெண்களும் அவர்களின் கல்விசார் மற்றும் வாழ்க்கைத்தொழில்சார் தேர்ச்சிகளையும் அவர்களின் தனிப்பட்ட அபிவிருத்தியின் ஏனைய அம்சங்களையும் முன்னெடுத்துச்செல்லும் அதே வேளையில் விளையாட்டைப் பின்தொடர்ந்து அதில் மேன்மை எய்துவதனை இயலச்செய்வதற்கான மூலவளங்களையும் சேவைகளையும் வசதிகளையும் வழங்குதல் ; அத்துடன்

(எ) விளையாட்டு விஞ்ஞானம், விளையாட்டு மருத்துவம், உடற்கல்வி மற்றும் விளையாட்டுப் பொறியியல் பற்றிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி வசதிகள் உட்பட விளையாட்டுக்கான தெற்காசிய அறிவு நிலையமொன்றை உருவாக்குதல்.

(2) ஓராம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட குறிக்கோள்களைச் செயற்படுத்துவதில், கூட்டுத்தாபனம், அத்தகைய செயற்படுத்துகை இனம், மதம், மொழி, சாதி, பால், அரசியல் அபிப்பிராயம், பிறப்பிடம் என்பவற்றை அல்லது அத்தகைய ஏதுக்களுள் எவற்றையும் அடிப்படையாகக்கொண்ட ஏதேனும் வேறுபாடின்றி நிறைவேற்றப்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

*அரசாங்கத்தின் அல்லது மாகாணத்தின் அமைச்சினது அல்லது திணைக் களத்தினது பணியுடன் முரண்பாடில்லா திருப்பதனைக் கூட்டுத்தாபனம் உறுதிப் படுத்துதல்.*

**4.** கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்கள், கூட்டுத்தாபனத்தின் பணிக்கும் அரசாங்கத்தின் அல்லது ஏதேனும் மாகாண சபையின் ஏதேனும் அமைச்சினால் அல்லது திணைக்களத்தினால் ஒரேநேரத்தில் நிறைவேற்றப்படும் ஏதேனும் பணிக்கும் இடையே ஏதேனும் முரண்பாடெதனையும் உருவாக்காத வகையிலான அத்தகையமுறையில் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாப னத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.*

**5.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டுத்தாப னத்தின் அலுவல்களின் முகாமையும் நிருவாகமும், 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளினால் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான பதவி தாங்குநர்களைக் கொண்டதும் (இதனகத்துப்பின்னர் "பேரவை" எனக் குறிப்பீடுசெய்யப்படுவதுமான) ஆளும் பேரவை யொன்றினால் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

(2) (அ) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று பதவிவகிக்கின்ற நிறுவகத்தின் ஆளும் பேரவை, 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளினால் ஏற்பாடுசெய்யப்பட்ட முறையில் முதலாவது பேரவை நியமிக்கப்படும்வரை அல்லது தேர்ந்தெடுக்கப்படும்வரை கூட்டுத்தாபனத்தின் பேரவையாகப் பணியாற்றுதல் வேண்டும்.

(ஆ) கூட்டுத்தாபனத்தின் முதலாவது பேரவையானது, இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்து ஓராண்டிற்குள் நியமிக்கப்படுதல் அல்லது தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்.

(3) (அ) போஷகர்கள் மற்றும் மதியுரைஞர்கள் உட்பட, பேரவையின் பதவிதாங்குநர் ஒவ்வொருவரும் மூன்றாண்டுக் காலப்பகுதியொன்றுக்கு நியமிக்கப்படுதல் அல்லது தேர்ந் தெடுக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய எவரேனும்

பதவிதாங்குநர், போஷகர் அல்லது மதியுரைநர் சொல்லப்பட்ட மூன்றாண்டுக் காலப்பகுதி கழிந்ததன் பின்னர் மீள நியமிக்கப்படுவதற்கு அல்லது மீளத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

(ஆ) பதவிதாங்குநரொருவரின் இறப்பு, பதவிவிலகுகை, இயலாமை அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுகின்றமை காரணமாக வெற்றிடமொன்று ஏற்படும்பட்சத்தில், பேரவையானது கூட்டுத்தாபனத்தின் விதிகளைக் கருத்திற்கொண்டு, அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு ஆளொருவரைத் தேர்ந்தெடுத்தல் அல்லது நியமித்தல் வேண்டும்.

(இ) பந்தி (ஆ) இன்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட ஆள், அவர் எந்த உறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அந்த உறுப்பினரின் பதவிக்காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்கு மட்டுமே பதவிவகித்தல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் தத்துவங்கள்.*

**6**. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு அமைய, கூட்டுத்தாபனம், பின்வரும் தத்துவங்களுட்பட, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கு அல்லது முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும் கருமங்களையும் செய்வதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காகத் தேவைப்படக்கூடிய காணிகளை அல்லது கட்டிடங்களைக் கொள்வனவு செய்தல், கொள்ளுதல், வாடகைக்கு எடுத்தல், நிர்மாணித்தல், புனரமைத்தல் மற்றும் வேறுவகையாகப் பெறுதல் மற்றும் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்குடன் உசிதமானதெனக் கருதப்படக்கூடியவாறு அவற்றைக் கையாளுதல் அல்லது கையுதிர்த்தல் ;

(ஆ) விளையாட்டும் விளையாட்டுடன் தொடர்புபட்ட துறைகளும் பற்றிய நிகழ்ச்சித்திட்டங்களையும் நிகழ்ச்சிகளையும் ஒழுங்குபடுத்துதல் ;

(இ) *கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு அல்லது அதன் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் அல்லது உடன்படிக்கைகளையும் நேரடியாக அல்லது அதன்சார்பில் கூட்டுத்தாபனத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் அல்லது முகவரினூடாகச் செய்துகொள்ளுதலும், புரிதலும் அல்லது நிறைவேற்றுதலும் ;*

(ஈ) *பிணைப்பொறுப்புகளுடனோ அல்லது பிணைப் பொறுப்புகளின்றியோ நிதிகளைக் கடனாகப் பெறுதல் அல்லது திரட்டுதல் மற்றும் காசாக அல்லது பொருளாக மானியக்கொடைகளையும் கொடைகளையும் அல்லது நன்கொடைகளையும் பெறுதல் :*

*ஆயின், சபையானது, கூட்டுத்தாபனத்துக்கு அளிக்கப்பட்ட எல்லா வெளிநாட்டு மானியக் கொடைகள், கொடைகள் அல்லது நன்கொடைகள் தொடர்பிலும், நிதி என்னும் விடயம் எவ்வமைச்சருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அவ்வமைச்சரின் அமைச்சினது வெளிநாட்டு மூலவளங்கள் திணைக் களத்தின் எழுத்திலான முன்னங்கீகாரத்தைப் பெறுதல் வேண்டும் ;*

(உ) *நாணயமாற்றுண்டியல்கள், காசோலைகள், வாக்குறுதிப்பத்திரங்கள் மற்றும் வேறு கைமாற்றத்தகு சாசனங்களை ஆக்குதலும், வரைதலும், ஏற்றுக் கொள்ளுதலும், கழிப்பனவு செய்தலும், புறக்குறிப் பிடுதலும், கைமாற்றுதலும், வாங்குதலும், விற்றலும் மற்றும் வழங்குதலும் ஏதேனும் வங்கியில் கணக்கு களைத் திறத்தலும், தொழிற்படுத்துதலும், பேணுதலும், மூடிவிடுதலும் ;*

(ஊ) *கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக உடனடியாகத் தேவைப்படாத எவையேனும் நிதிகளைப் பேரவை தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய முறையில் முதலீடு செய்தல் ;*

(எ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்குடன் ஏதேனும் சட்டமுறையான நம்பிக்கைப் பொறுப்பை அல்லது ஏதேனும் நிலையானசொத்து அல்லது தனிப்பட்ட ஆதனத்தைப் பொறுப்பேற்றலும், ஏற்றுக்கொள்ளுதலும், நிறைவேற்றுதலும், புரிதலும் மற்றும் நிருவகித்தலும் ;

(ஏ) கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களையும் சேவையாளர் களையும் நியமித்தலும், தொழிலுக்கமர்த்துதலும், பதவிநீக்குதலும் அல்லது அவர்களின் சேவைகளை முடிவுறுத்துதலும், அவர்கள்மீது ஒழுக்காற்றுக் கட்டுப் பாட்டைப் பிரயோகித்தலும் மற்றும் கூட்டுத்தாப னத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்த கைய சம்பளங்களையும், படிகளையும், பணிக்கொடை களையும் அவர்களுக்குச் செலுத்துதலும் ;

(ஐ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்குடன் விரிவுரைகளையும் கருத்தரங்குகளையும் மாநாடுகளையும் நிகழ்ச்சிகளையும் ஒழுங்கு படுத்துதல் ;

(ஒ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக் கோள்களையுடைய வேறு உள்நாட்டு மற்றும் வெளி நாட்டு நிறுவனங்களுடன் இணைதலும் ஒருங்கி ணைதலும் பிணிக்கின்ற உடன்படிக்கைகளைச் செய்து கொள்ளுதலும் ;

(ஓ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக இலங்கையில் அல்லது வெளிநாடுகளில் ஆளணியினருக்குப் பயிற்சியளித்தல் ;

(ஔ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை முறையாகவும் பயனுறவும் நிறைவேற்றுவதற்கு அவசியமானவாறான அல்லது உசிதமானவாறான வேறெல்லாச் செயற் பாடுகளிலும் ஈடுபடுதல் ; அத்துடன்

(க) இலங்கையில் அல்லது வெளிநாடுகளில் உள்ள அரச செயற்பாட்டாளர்களுடன் உடன்படிக்கைகளையும், புரிந்துணர்வு ஒப்பந்தங்களையும், கூற்றுக்களையும் கையொப்பமிடுதல்.

7. (1) கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் பொதுக்கூட்டத்திலும், சமுகமளித்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கினருக்குக் குறையாதோரின் வாக்குப் பெரும்பான்மை கொண்டும், பின்வரும் கருமங்கள் எல்லாவற்றுக்காகவும் அல்லது அவற்றுள் எவற்றுக்காகவும் இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்துக்குக்காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :- கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

(அ) உறுப்பாண்மையை வகுப்பாக்கம் செய்தலும், உறுப்பினர்களைச் சேர்த்தலும், அவர்கள் விலகுதலும், அவர்களை விலக்குதலும் அல்லது அவர்கள் பதவி நீங்குதலும் மற்றும் உறுப்பினர்களினால் செலுத்தப்படற்பாலனவான கட்டணங்களும் ;

(ஆ) பேரவையின் பதவிதாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தல் அல்லது பதவிதாங்குநர்கள் பதவியை வறிதாக்குதல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் மற்றும் பதவிதாங்குநர்களின் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள் மற்றும் சேவையாளர்கள் என்போரின் நியமன நியதிகளும் நிபந்தனைகளும், தத்துவங்களும், பணிகளும், கடமைகளும் ;

(ஈ) பேரவையின் அல்லது அதன் ஏதேனும் உபபேரவையின் கூட்டங்களைக் கூட்டுவதற்கும் நடாத்துவதற்கும் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறையும், அத்தகைய கூட்டங்கள் பற்றிய அறிவித்தல்களும், அவற்றின் நிகழ்ச்சிநிரலும், அவற்றிற்கான கூட்டநடப்பெண்ணும் மற்றும் அவற்றில் அலுவல்களை நடாத்துதலும் ;

(உ) பேரவையினதும் கூட்டுத்தாபனத்தினதும் உறுப்பினராகவிருப்பதற்கான தகைமைகளும் தகைமையீனங்களும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனங்களின் நிருவாகமும் முகாமையும் ; அத்துடன்

(எ) பொதுவாகக் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தலும், அதன் குறிக்கோள்களை எய்துதலும் மற்றும் கூட்டுத்தாபனத்தைக் கலைத்தலும்.

*(2)* கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்படும் விதி எதுவும் அதே போன்ற கூட்டத்திலும் மற்றும் அதேபோன்ற முறையிலும், இப்பிரிவின் *(1)* ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதியொன்று என்றாற்போன்று திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்கெதுவும் சேர்க்கப்படலாம் அல்லது அது ஒழிக்கப்படலாம்.

*(3)* கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் எல்லா நேரங்களிலும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

*(4)* ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகள் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

*உறுப்பினர்கள் பற்றிய இடாப்பு.*

**8**. பேரவையானது உறுப்பினர்கள் பற்றிய இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டும் ; இதில் உறுப்பினர்களின் பெயர், முகவரி மற்றும் வேறு அத்தியாவசியமான விபரங்கள் எழுதப்படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் நிதியம்.*

**9**. *(1)* கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*(2)* கூட்டுத்தாபனத்திற்காகவும் அதன் கணக்காலும் கொடை, மரணசாசனக் கொடை, நன்கொடை, ஒப்பப்பணம், உதவு தொகை, கட்டணங்கள் அல்லது மானியக்கொடை என்ற வகையாகப் பெறப்பட்ட எல்லாப்பணங்களும், பேரவையினால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவிற்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

*(3)* கூட்டுத்தாபனமானது சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும் புரிவதிலும் நிறைவேற்றுவதிலும் அதனால் உறப்படும் எல்லாச் செலவினங்களையும் கொடுத்துத்தீர்ப்பதற்கு தேவைப்படக்கூடியவாறான பணத்தொகைகள் எல்லாம் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

**10.** (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும். கணக்குகளும் கணக்காய்வும்.

(2) கூட்டுத்தாபனம், அதன் வருமானமும் செலவினமும், சொத்துக்களும் பொறுப்புக்களும் மற்றும் கூட்டுத்தாபனத்தின் வேறெல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் பற்றிய முறையான கணக்குகள் வைத்திருக்கப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் அல்லது அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி கணக்காய்வாளர் தலைமை யதிபதியினால் நியமிக்கப்பட்ட தகைமைபெற்ற கணக்காய்வாளர் ஒருவரினால் ஆண்டுதோறும் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவின் நோக்கங்களுக்காகத் ''தகைமைபெற்ற கணக்காய்வாளர்'' என்பது-

(அ) இலங்கையின் வரைவுபெற்ற கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினராக இருப்பதோடு கணக்காளர் ஒருவராகத் தொழில்புரியவென அத்தகைய நிறுவகத் தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றை உடையவருமான ஆள் ஒருவர் ; அல்லது

(ஆ) எந்தக் கணக்காளர் குழுமமொன்றின் ஒவ்வொரு வதிவுள்ள பங்காளரும் இலங்கையின் வரைவு பெற்ற கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக இருப்பதோடு கணக்காளர் ஒருவராகத் தொழில்புரியவென அத்தகைய நிறுவகத்தின் பேரவை யினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றை உடையவ ராகவும் உள்ளாரோ அந்தக் கணக்காளர் குழுமம் ஒன்று,

எனப்பொருள்படும்.

ஆண்டறிக்கை.

**11.** (1) பேரவையானது ஒவ்வொரு நிதியாண்டிற்கும் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் பற்றிய அறிக்கையொன்றைத் தயாரித்தல் வேண்டுமென்பதுடன், விளையாட்டுகள் என்ற விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கும், 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, வலிந்துதவு சமூக சேவை ஒழுங்கமைப்புகள் (பதிவு செய்தலும் மேற்பார்வை செய்தலும்) சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்புகள் பதிவாளருக்கும், அத்தகைய அறிக்கையையும் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குக்கூற்றையும், அத்தகைய அறிக்கை எவ்வாண்டு தொடர்பானதோ அவ்வாண்டை அடுத்துறுகின்ற ஆண்டின் ஆறு மாதங்கள் முடிவுறுவதற்கு முன்னர் சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) நிதியாண்டின்போது கூட்டுத்தாபனத்தினால் பெறப்பட்ட வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுப் பணங்கள் தொடர்பான தனிவேறான கணக்கொன்று (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அறிக்கையுடன் இணைக்கப்படுதல் வேண்டும்.

நிறுவகத்தினால் செலுத்தப்பட வேண்டியவையும் நிறுவகத்திற்குச் செலுத்தப்படற்பாலன வையுமான தனிசுகள்.

**12.** இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்றுள்ள நிறுவகத்தின் எல்லாத் தனிசுகளும், பொறுப்புக்களும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று நிறுவகத்துக்கு வருமதியாகவுள்ள எல்லாத் தனிசுகளும் செலுத்தப்படற்பாலனவான ஒப்பப்பணங்களும், உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனம் அசைவுள்ள மற்றும் அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்.

**13.** இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டுத்தாபனமானது ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு என்பவற்றின் பயனைக் கொண்டு அல்லது வேறுவகையில் அதற்கு உரித்தாக வரக்கூடியதான ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை எடுக்கவும் வைத்திருக்கவும் சட்டப்படி இயன்றதாதலும் ஆற்றலுடையதாதலும் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆதனங்கள் யாவும் இச்சட்டத்தின் நேக்கத்துக்காகவும், 7ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமையவும், அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்கு கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையுதிர்க்கவுள்ள தத்துவத்துடன் கூட்டுத்தாபனத்தால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

*பணங்களையும் ஆதனங்களையும் பயன்படுத்தல்.*

**14.** எவ்வாறாயினும் பெறப்பட்ட கூட்டுத்தாபனத்தின் பணங்களும் ஆதனங்களும் அதன் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்காக மட்டுமே பயன்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அதன் பாகம் எதுவும், பங்கிலாபம், மிகையூதியம் அல்லது இலாபம் என்றவகையில் நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமலோ கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களுக்குச் செலுத்தப்படுதலோ அல்லது கைமாற்றப்படுதலோ ஆகாது.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**15.** (1) கூட்டுத்தாபனத்தின் இலச்சினை, பேரவையின் இரண்டு உறுப்பினர்களின் முன்னிலையிலன்றி எத்தகையதுமான சாசனமெதிலும் பொறிக்கப்படுதலாகாது; அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்கு அத்தாட்சியாக அச்சாசனத்தில் அவர்களது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும். அவ்வாறு கையொப்பமிடுதல் எவரேனுமாள் சாட்சிக்காரராகக் கையொப்பமிடுவதிலிருந்தும் தனிவேறானதாதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் இலச்சினை பேரவையினால் முடிபு செய்யப்படக்கூடியவாறு பேரவையின் பதவிதாங்குநர் ஒருவரின் கட்டுக்காப்பிலிருத்தல் வேண்டும்.

*கலைக்கப்பட்டதன் மீது எஞ்சியிருக்கின்ற ஆதனம்.*

**16.** (1) கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன் மீது அதன் எல்லாத் தனிசுகளையும், பொறுப்புக்களையும் கொடுத்துத் தீர்த்ததன் பின்னர் எத்தகையதுமான ஆதனம் எதுவும் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனமானது கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதல் ஆகாது. ஆனால், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களையுடையதும் மற்றும் அதன் விதிகளின்படி அதன் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளித்தல் தடைசெய்யப்பட்டுள்ளதுமான வேறு ஏதேனும் நிறுவனத்திற்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காகத் தோதான நிறுவனம், சமுகமளித்துள்ள உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குகளினால் ஒரு பொதுக்கூட்டத்தில் கலைத்தலுக்கு நேர்முன்னர் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

*குடியரசின் உரிமைகளைப் பேணல்.*

**17**. இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உரிமைகளையேனும் பங்கப் படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**18**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலேங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்